**செய்தி வெளியீடு எண்: 67/2024** **நாள்: 31.08.2024**

**பத்திரிக்கைச் செய்தி**

சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2-வது கட்டத்தில் பூந்தமல்லி பணிமனையில் 110/33-27 கி.வோல்ட் துணை மின்நிலையம் (Receiving Substation - RSS) வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டு திறக்கப்பட்டுள்ளதாக சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் பெருமையுடன் அறிவித்துள்ளது. பூந்தமல்லி பணிமனையில் துணை மின்நிலையம் ஆனது, மெட்ரோ இரயில்கள் மற்றும் மெட்ரோ நிலையங்களுக்கு மின்சாரம் வழங்கும் முக்கியமான உள்கட்டமைப்பாகும். இதனை சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்) அவர்கள் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உயர் அலுவலர்கள் முன்னிலையில் திறந்து வைத்தார்.

இந்த மைல்கல் சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் 2-வது கட்டத்தின் செயல்பாட்டில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் குறிக்கிறது, சென்னைக்கு உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்பை வழங்குவதில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துகிறது, மேலும் நகரத்தில் தடையற்ற மெட்ரோ இரயில் பயண அனுபவத்திற்கு வழி வகுக்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**